canton de vaud
LIBERTÉ ET PATRIE

**Office cantonal d'orientation scolaire et professionnelle**

**பிற மொழிகள்: உங்கள் ஸ்மார்ட்போன் மூலம் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.**

www.vd.ch/orientation
► பிரிவு *Publications*

லொசான், மார்ச் 2024

அம்மா, ஐயா அவர்களே, அன்பான பெற்றோர்களே,

அடுத்த கோடையில், உங்கள் பிள்ளை பள்ளியை முடித்துவிட்டு, பயிற்சி, உடற்பயிற்சி கூடத்தில் படிப்பு அல்லது மாறுகை படிப்பைத் தொடங்கலாம். இந்த முக்கியமான தருணத்தில் உங்களுக்காககன்டோன் கல்வி மற்றும் தொழில்முறைக்கு வழிகாட்டல் சம்பந்தப்பட்ட அலுவலகம் (OCOSP) உள்ளது. இந்தக் கடிதத்தில், நாங்கள் உங்களுக்கு வழங்கும் இரண்டு ஆதரவுகளை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்: ஒன்று, நீங்கள் தகவல்களைப் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றொன்று, தொழில் சார்ந்து வழிகாட்டும் ஆலோசனைச் சேவை.

1. **நீங்கள் உங்கள் பிள்ளையை தனது எதிர்கால வாழ்க்கை தொழில்முறையில் கண்காணிக்க விரும்புகிறீர்களா?**

எங்களுடைய இணையதளத்தைப் பார்ப்பதன் மூலம் நீங்கள் உங்கள் பிள்ளைக்கு உதவலாம்:

www.vd.ch/orientation

► பிரிவு ***Pour les élèves de la scolarité obligatoire***

நீங்கள் பின்வருவனவற்றைப் பற்றிய தகவல்களைக் கண்டறியலாம்:

- தொழில்கள், கல்வி முறை மற்றும் மேம்பட்ட பாடப் பயிற்சி;
- உள்ளிருப்புப் பயிற்சியைக் (இன்டர்ன்ஷிப்) கண்டுபிடித்து, அதை செயல்படுத்துதல்;
- கற்றுக்கொள்வதற்கு பழகுதொழிலுக்கான இடத்தை தேடிக் கண்டறிவது

2. **உங்கள் பிள்ளையின் எதிர்காலத் வாழ்க்கைத் தொழில் குறித்து வல்லுநர் ஒருவருடன் கலந்தாய்வு செய்திட விரும்புகிறீர்களா?**

நீங்களும் உங்கள் பிள்ளையும் பள்ளியில் உள்ள வாழ்க்கைத் தொழில் குறித்து அறிவுரை வழங்குபவருடன் கீழ் குறித்த வழிகள் குறித்து அறிய ஒரு கலந்தாய்வுக்கு வரலாம்:

- உங்கள் குழந்தையின் ஆர்வங்கள், மாண்புகள், திறன்கள் மற்றும் வளங்களைக் கண்டறிந்து, அவற்றை கிடைக்கக் கூடிய கல்வி முறைமைகளுடன் இணைத்திடுதல்;

- உங்கள் பிள்ளையின் வாழ்க்கைத் தொழில் தொடக்கம் வெற்றிகரமாக அமைய தனிப்பட்ட ஆதரவை வழங்குதல் (நிறுவனங்களை அறிந்து தேர்வு செய்தல், விண்ணப்பம் எழுதுதல், நுழைவுத் தேர்வுகளுக்கு தயார் செய்வது போன்றவை);
- உங்கள் பிள்ளை தனது எதிர்கால வாழ்க்கைத் தொழிலில் சந்திக்கக்கூடிய சிரமங்கள் அல்லது தடைகளைக் குறித்து ஆராய்ந்து செயல்படுவது.

அம்மா, ஐயா, அன்பான பெற்றோர் அவர்களே, உங்களுக்கு சேவை செய்ய தயாராக, நாங்கள் எங்கள் அன்பான வணக்கங்களை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Alexandra Petrovitch

A. Petrovitch

மேலதிகாரி